முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 09 ம் நாள் திங்கட்கிழமை

<u>இடைநிலை மனு எண். 10/2025</u>

<u>in</u>

<u>அசல் வழக்கு எண். 290/2023</u>

K.T.இளையகண்ணு ..... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. ராஜ்குமார்
2. செந்தில்குமார்
3. முருகன்
4. மாவட்ட ஆட்சியர், சேலம்
5. சார் பதிவாளர், வாழப்பாடி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 22.04.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஓ.சகாபுதீன் அவர்கள் முன்னிலையாகியும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆர்.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:-

<u>உத்தரவு</u>

மனுதாரர்/ வாதி உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 20(A) -ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u> :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி அசல் வழக்கில்

ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரங்கள் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி வக்காலத்தை திரும்ப பெறுவது குறித்து முந்தைய வழக்கறிஞருக்கு 29.10.2024 ம் தேதியன்று பதிவு தபாலில் அறிவிப்பு அனுப்பி உள்ளார். மேற்படி அறிவிப்பை வழக்கறிஞர் 30.10.2024 ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பதிலோ அல்லது ஆட்சேபணையோ தெரிவிக்கவில்லை. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :–

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. <u>தீர்வு :–</u>

மனுதாரர்/ வாதி உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 20(A) –ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான முந்தைய வழக்கறிஞர்களிடம் வக்காலத்தில் ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு பெறவில்லை. மனுதாரர் அவரது விருப்பம்போல் வழக்கில் வேறு வழக்கறிஞரை நியமனம் செய்து கொள்ள முழு உரிமை உள்ளது. மேலும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டது.

**CDJ 2014 MHC 3508**

**Parties: S.Diwakar Versus The Deputy Registrar High Court of Madras (Writs) & Another**

**Para.5.2.** The relationship between the Advocate and the client is strictly professional. It is depends upon the trust between the parties. The legal profession is not only a service but also a calling. Therefore, when the client wants to engage another counsel, the earlier Lawyer has got no option, except to recuse himself from the case. Acting as a Lawyer to a client is different to any other disputes inter se including the payment of fees etc.

**1997 (1) CTC 242**

**C.S.Venkatasubramanian Vs. State Bank of India**

**Para.3.** Shri F.S.Nariman, learned Senior counsel for the appellant contended that under Order 3. Rule 4(2) CPC read with Rule 20-A of the Civil Rules of practice it is open to the parties either to change the counsel or engage a new counsel with the consent or with the leave of the Court.

**CDJ 2016 Kar HC 1006 : 2017 AIR(Kar) 1**

**Karnataka Power Transmission Corporation Ltd. Represented by Executive Engineer (ELEC) Versus M. Rajashekar & Others**

**Para.7.** There is nothing known as irrevocable vakalatnama. The right of a party to withdraw vakalatnama or authorization given to an advocate is absolute. Hence, a party may discharge his advocate any time, with or without cause by withdrawing his vakalatnama or authorization. On discharging the advocate, the party has the right to have the case file returned to him from the advocate, and any refusal by the advocate to return the file amounts to misconduct under Section 35 of the Advocates Act, 1961. In any proceeding, including civil and criminal, a party has an absolute right to appoint a new Advocate. Under no circumstance, a party can be denied of his right to appoint a new advocate of his choice. Therefore, it follows that any rule or law imposing restriction on the said right can't be construed as mandatory. Accordingly, Courts, Tribunals or other authorities shall not ask for 'no objection' of the advocate already on record, to accept the vakalatnama filed by a new advocate.

மேற்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. மனுதாரர் 29.10.2024ம் தேதி முந்தைய வழக்கறிஞருக்கு வக்காலத்து நாமாவை ரத்து செய்வதாக கூறி பதிவு தபாலில் அறிவிப்பு அனுப்பி உள்ளார். மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டுள்ளார். தற்போது வழக்கறிஞர் திரு.ஓ.சகாபுதீன் என்பவர் தாக்கல் செய்துள்ள

வக்காலத்தில் மனுதாரர் /வாதியின் முந்தைய வழக்கறிஞர் ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு செய்யவில்லை என்ற காரணத்திற்காக வக்காலத்தை நிராகரிக்க இயலாது. மனுதாரர் வழக்கில் ஆஜராக வேறு வழக்கறிஞரை நியமனம் செய்து வழக்கை நடத்துவதற்கும் முழு உரிமை உள்ளது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த மனு அனுமதிக்கத்தக்கது என பிரச்சனையின்மீது தீர்வு காணப்படுகிறது.

8. முடிவில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

(ஒம்/–என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.